2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை

2

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தவேண்டியதுடன் அம் முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

4

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

1.6.1.1 வருமானங்களின் பெறுவனவு

(அ) விட்டுவிடுதல்கள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மாவட்ட செயலகத்திற்குரித்தானதாக காட்டப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களுக்கான இல்லங்கள் மற்றும் விடுதிகள் என்பவற்றிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்த வாடகை வருமானம் கூட்டுமொத்தம் ரூபா 846,136 நிதிக்கூற்றுக்களின் படிவம் ஏசீஏ-1 இல் காட்டப்பட்டிருக்காது விடுபட்டிருந்தது.

1.6.1.2 மீண்டெழும் செலவினம்

மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் தொடர்பில் திறைசேரிப் புத்தகங்களில் கூட்டுமொத்தம் ரூபா 162,924,486 எனவும் நிதிச் செயலாற்றுகைக்கூற்றில் கூட்டுமொத்தம் ரூபா 162,707,416 எனவும் காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் கூட்டுமொத்தம் ரூபா 217,070 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

	பதிவேடுகளின் வகை	உரிய பிரமாணம்	அவதானிப்புகள்
(அ)	நிலையான சொத்துப் பதிவேடு	1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2)	நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை
(ஆ)	கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு	2002 நொவெம்பர் 28 ஆம் திகதிய IVI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	நாளதுவரைப்படுத்தப் பட்டிருக்கவில்லை
(இ)	நட்டங்கள் தொடர்பான பதிவேடு	நிதிப் பிரமாணம் 110	நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை

5

(ஈ)	மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு	நிதிப் பிரமாணம் 454(2)	பேணப்பட்டிருக்கவில்லை
(உ)	உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு	நிதிப் பிரமாணம் 845(1)	பேணப்பட்டிருக்கவில்லை
(ஊ)	பிணைகள் பதிவேடு	நிதிப் பிரமாணம் 891(1)	பேணப்பட்டிருக்கவில்லை
(எ)	பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப் பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.11.2	பேணப்பட்டிருக்கவில்லை
(ஏ)	கேள்வி கோரல் பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.2.1	பேணப்பட்டிருக்கவில்லை

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

ஆண்டினுள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் கூட்டுமொத்தம் ரூபா 14,510,038 நிதி ஏற்பாட்டினை மாவட்ட செயலகத்தின் கட்டடப் புனரமைப்பு, தளபாட அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு மற்றும் கட்டடங்கள் நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்தமுடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களின் மூலதன செலவினங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு கூட்டுமொத்தம் ரூபா 245 மில்லியனில் 24 செப்தெம்பர் 2019 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கைக்கமைவாக சேமிக்கப்பட்டிருக்க வேண்டிய மூலதனச் செலவினத்திற்கான மொத்தத் தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதம் அல்லது கூட்டுமொத்தம் ரூபா 61.25 மில்லியன் தவிர 60 சதவீதம் அல்லது கூட்டுமொத்தம் ரூபா 148.58 மில்லியன் பெறுமதியான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தது. இவற்றுள் மீளாய்வாண்டின் சனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் மாவட்ட செயலகத்தின் கட்டடநிர்மாண வேலைகள் (படிநிலை – II) இற்காக கூட்டுமொத்தம் ரூபா 190 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது விடயம் தொடர்பில் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சினால் கோரப்பட்டிருந்த விலைமனுக்கோரல் மற்றும்

6

தொழில்நுட்ப மதிப்பீடு என்பவற்றிலேற்பட்டிருந்த காலதாமதத்தினால் அந் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 24 செப்தெம்பர் 2019 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கைக்கமைவாக எனக் குறிப்பிடப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் பயிற்சியளித்தலும் இயலளவு கட்டியெழுப்புதலும் செலவின விடயத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பொறுப்பு ரூபா 72,150 நடப்பாண்டில் அதற்கென ரூபா 30,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மேற்படி பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காது செலவழிக்கப்பட்டிருந்தது.

2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

மீளாய்வாண்டில் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக சனாதிபதி செயலகம், ஆறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களமொன்றினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வேலைகள் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்காது அவை பூரணப்படுத்தப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுச் சிட்டைகள் தயாரிக்கப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா 786.15 மில்லியன் பொறுப்புக்கள் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு	பெறுமதி	இணங்காமைகள்
	ரூபா	
அரச நிர்வாகச் சுற்றறிக்கை		
(i) 11 யூன் 1999 ஆம் திகதிய 14/99 ஆம் இலக்கம்	516,000	மீளாய்வாண்டில் நேர்மையுடன் செய்யும் பிரகடனம் பெறப்பட்டிராது 04 அலுவலர்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது.

7

(ii)	30 ஆகஸ்ட் 1988 ஆம் திகதிய 29/88 ஆம் இலக்கம்	916,483	பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சம்மதம் பெறப்பட்டிருக்காது 34 அலுவலர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த இரு வருடக் கடன்கள் தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்படுகின்றது.

2.5 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சனாதிபதி தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணியாட் தொகுதியினருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்தினால் தேர்தல்கள் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த உப கட்டுநிதி கூட்டுமொத்தம் ரூபா 1,286,625 தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது.

(ஆ) பதவி வறிதாக்கப்பட்ட, சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த, பதவியினை விட்டுச் சென்றிருந்த, இறந்த அலுவலர்களது பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 555,632 இனை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் அறவிட்டுக்கொள்வதற்கு கடந்த 04 தொடக்கம் 26 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.6 வைப்புக்கள்

மாவட்ட செயலகம் மற்றும் ஏனைய ஆறு பிரதேச செயலகங்களின் 170 குறித்த நோக்கங்களுக்கான வைப்புக்கள், 38 பிடிப்பண வைப்புக்கள், 06 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கூட்டுமொத்தம் ரூபா 18,724,083 கடந்த 03 மாதங்கள் தொடக்கம் 05 ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 இற்கு முரணாக கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வங்கிக்கு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகள் கூட்டுமொத்தம் ரூபா 21,200 தொடர்பில் இரு பிரதேச செயலகங்களினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 **செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் செயற்பாட்டு மீளாய்வு, நிலைபேறான அபிவிருத்தி, நல்லாளுகை மற்றும் மனிதவள அபிவிருத்திக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

ஏ.ஜே.எல்.விமலரத்ன
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
வாழ்வாதார உதவி வழங்கப்பட்ட குடும்பங்கள்	✓		
கிராமசக்தி மற்றும்சமுர்த்தி திட்டத்தின் கீழ் சுழல்கடன் வழங்கப்பட்ட குடும்பங்கள்	✓ ‘		
சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்	✓		
வீட்டு உதவி வழங்கல்	✓		
குளங்கள் புதுப்பித்தல்	✓		
சமுர்த்தி திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட குடும்பங்கள்	✓		
வீட்டுத்தோட்டம்	✓		
நெல் உற்பத்தி	✓		
தானிய உற்பத்தி	✓		
காய்கறி உற்பத்தி		✓	
பால் உற்பத்தி		✓	
இறைச்சி உற்பத்தி	✓		

முட்டை உற்பத்தி		✓	
விவசாய கிணறு புதுப்பித்தல்	✓		
சுகாதார நிறுவனந்களுக்கான புதிய கட்டடம்	✓		
சுகாதார மையங்களுக்கான மேம்பட்ட வசதிகள்	✓		
டெங்கு நோய் தடுத்தல்	✓		
வஞ்ஞான ஆய்வு கூடம் கட்டுதல்	✓		
நவீன வகுப்பறை புதுப்பித்தல், கட்டுதல்	✓		
ஆரம்ப பாடசாலை புனரமைத்தல்	✓		
இலவச நீர் இணைப்பு வழுங்கல்	✓		
புதிய திறந்தவெளி கிணறு முடிக்கப்பட்டது	✓		
குழாய் கிணறு அமைத்தல்	✓		
நீர் சுத்திகரிப்பு முறையை நிறுவுதல்	✓		
சமுக நீர் வழங்கல் திட்டத்தை வழங்கல்	✓		
இலவச மின்சார திட்டம் வழங்கல்	✓		
கிராமபுற சாலையை புதுப்பித்தல்	✓		

மத இடங்களை புதுப்பித்தல்	✓		
சிறுவர் பூங்கா நிறுவுதல்	✓		
விளையாட்டு மைதானம் புதுப்பித்தல்	✓		

05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடையும் செயலாற்றுகை

5.1 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

நோக்கம்/ தூரநோக்கு	இலக்கு	அடைவு மட்டம் சுட்டிகள்	முன்னேற்றம்		
			0 – 49	50-74	75– 100
வறுமையின்மை	வாழ்வாதாரம்	69 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.			✓
	முலதனம்	2485 குடும்பங்களுக்கு கிராம சக்தி மற்றும் சமுர்த்தியின் கீழ் வருமானம் ஈட்டும் திட்டங்கள் முலம் கடன்கள் வழங்கப்பட்டது.			✓
	அபிவிருத்தி நிறுவனங்கள்.	15 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் நிறுவப்பட்டது.			✓
	வாழ்விடம்	1520 குடும்பங்களுக்கான வீட்டு உதவிகள் வழங்கள்			✓
பசியின்மை	நிவாரணத்திட்டம்	சமுர்த்தி நிவாரணத் திட்டத்தின் கீழ் 24245 குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.			✓
	அனைவருக்கும் உணவு	13581வீட்டுத்தோட்டம்நிறுவப்பட்டுள்ளது.			✓

	உணவு உற்பத்தி அதிகரிப்பு	76135 மெட்ரிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது			✓
	உணவு உற்பத்தி அதிகரிப்பு	6390 மெட்ரிக் தொன் டன் தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது			✓
	உணவு உற்பத்தி அதிகரிப்பு	15392 மெட்ரிக் தொன் காய்கறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது		✓	
	உணவு உற்பத்தி அதிகரிப்பு	ஒரு நாளைக்கு 9438லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது		✓	
	உணவு உற்பத்தி அதிகரிப்பு	ஒரு நாளைக்கு 2982 கி.கிராம் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது			✓
	உணவு உற்பத்தி அதிகரிப்பு	ஒரு நாளைக்கு 2450 முட்டை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது		✓	
பசியின்மை	விவசாய உள்கட்டமைப்பு மேம்பாடு	27 குளங்கள் புதுப்பித்தல்			✓
	விவசாய உள்கட்டமைப்பு மேம்பாடு	216 தோட்ட கிணறு கட்டப்பட்டுள்ளது.			✓
நல்ல ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு	மேம்படுத்தப்பட்ட சுகாதார நிறுவனங்கள்	சுகாதார நிறுவனங்களுக்கான 14 புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.			✓
	மேம்படுத்தப்பட்ட சுகாதார நிறுவனங்கள்	5 சுகாதார மையங்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது			✓
	மேம்பட்ட சுகாதார நிலை, நிலைமை	டெங்கு நோய் கட்டுப்பாட்டில் உள்ளது			
தரமான கல்வி	மேம்பட்ட கல்வி வசதிகள்	53 வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டது.்.புதுப்பிக்கப்பட்டது.			✓
	மேம்பட்ட கல்வி வசதிகள்	3 விஞ்ஞான ஆய்வுகூடம் கட்டப்பட்டது			✓
	நவீன கல்வி முறைமை	17 நவீன வகுப்பறை புதுப்பிக்கப்பட்டமை			✓
	அனைவருக்கும் ஆரம்பக்கல்வி	70ஆரம்பகல்வி நிலையங்கள் புணரமைக்கப்பட்டது			✓
சுத்தமான நீரும் சுகாதாரமும்	சுத்தமான நீர் வசதிகள்	141 இலவச குழாய் நீர் இணைப்பு வழங்கப்பட்டடுள்ளது			✓
	போதுமான நீர் ஆதாரம்	80 கிணறு தோண்டப்பட்டது			✓
	போதுமான நீர் ஆதாரம்	26 கிணறு புரனமைக்கப்பட்டது			✓

	போதுமான நீர் ஆதாரம்	1 குழாய் கிணறு தோண்டப்பட்டது			✓
	சுத்தமான நீர் வசதிகள்	10 நீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவப்பட்டது			✓
	சுகாதார வசதிகள்	3 குடும்பங்களுக்கு சுகாதார வசதிகள் வழங்கப்பட்டது			
	சுத்தமான நீர் வசதிகள்	19 சமுக நீர் வழங்கல் திட்டம் நிறுவப்பட்டது			✓
துாய்மையான சக்தி பெறல்	அனைவருக்கும் மின்சக்தி	22 சூரிய நீர் பம்பி வழங்கப்பட்டது			✓
		51 இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டது			✓
தொழிற்துறை புணரமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு	சுலபமாக தொடர்பு கொள்ளலாம்	108.765கி.மீ கிராமபுற வீதி புணரமைக்கப்பட்டது.			✓
நிலையான நகரமும் சமுகமும்	நீரந்தர தீர்வு	309 மத இடங்கள் புதுப்பிக்கப்பட்டன.			✓
	மேம்பட்ட பொழுதுபோக்கு	32, குழந்தைகள் பூங்கா நிறுவப்பட்டது.			✓
	மேம்பட்ட பொழுதுபோக்கு	104, விளையாட்டு மைதானம் புணரமைக்கப்பட்டது			✓
ஏற்றுக்கொள்ள க்குடிய நுகர்வும் உற்பத்தியும்	உற்பத்தி அதிகரிப்பு	76135 மெட்ரிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.			✓
	உற்பத்தி அதிகரிப்பு	9736 மெட்ரிக் தொன் தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது			✓
	உற்பத்தி அதிகரிப்பு	13574 மெட்ரிக் தொன் காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது			✓
	உற்பத்தி அதிகரிப்பு	9438 லிற்றர் பால் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது		✓	
	உற்பத்தி அதிகரிப்பு	2982 முட்டை ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது		✓	
	உற்பத்தி அதிகரிப்பு	2450கி.கிராம் இறைச்சி ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது			✓

நிலவளங்களும் உயிர்களும்	மரத்திட்டம்	2627 மரக்கன்று நடப்பட்டது			✓

அத்தியாயம் 06 – மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்/ (அதிகப்படியான)
சிரேட்ட	37	21	16
மூன்றாம் நிலை	28	8	20
இரண்டாம் நிலை	563	375	188
ஆரம்பநிலை	75	47	28

6.2. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

- சிரேட்ட நிலை உத்தியோகத்தர்களுக்கு பதில்கடமை செய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டு அதற்கான வேதனம் வழங்கப்படுகிறது.பணிகளை முடிக்க இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படுகிறது
- மேலதிக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

6.3. மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு)		

பொதுநிதி கணக்குகளின் அமைப்பு	1	1	2000.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறமை மேம்படுத்தல். சரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
நேர்மறை சிந்தனை ஆளுமை வளர்ச்சி	62	4 மணித்தியாலயம்	5720.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
மனப்பாங்கு மாற்றம்	75	4 மணித்தியாலயம்	6220.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
தற்போதைய கணக்கியல் கணக்காய்வு மாற்றங்கள்	1		6000.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
கணினி பராமரிப்பும் பழுதுநீக்கமும்	16	3 நாட்கள்	20265.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்

யோகா பயிற்சி	14	15 மணித்தியாலயம்	10120.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
அடிப்படை கணினி செயல்பாடுகள்	25	1 நாட்கள்	15240.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
பொதுக்கொள்ளல நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்	48	2 நாட்கள்	42035.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
தொடர்பாடல் திறன்	46	2 நாட்கள்	33926.00		உள்நாட்டு	ஊழியர்களிடையை மேம்பட்ட கனிப்பட்ட வளர்ச்சியை செயல்படுத்த உலகளாவிய நிறுவன அமைப்பில் சிறந்த நிபுணர்களைஉருவாக்குதல்
புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கான அறிமுகப்பயிற்சி	86	2 நாட்கள்	42690.00			ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
குழுக்கட்டுமான பயிற்சி	40	2 நாட்கள்	43840.00		உள்நாட்டு	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான

						திறனை மேம்படுத்தல். சுரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
தலைமைத்துவ பயிற்சி	41	2 நாட்கள்	43320.00		**உள்நாட்டு**	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
வெளிக்களப்பயி ற்சி	22	3 நாட்கள்	256170.0 0		**உள்நாட்டு**	ஊழியர்களின் அறிவை மேம்படுத்தல். வேலை தொடர்பான திறனை மேம்படுத்தல். சரியான வேலை அணுகுமுறையை உருவாக்கல்
வெளிநாட்டுப்பயி ற்சி	1		57014.40			ஊழியர்களி டையை மேம்பட்ட கனிப்பட்ட வளர்ச்சியை செயல்படுத்த உலகளாவிய நிறுவன அமைப்பில் சிறந்த நி புணர்களைஉரு வாக்குதல்
சான்றிதழ் அச்சிடுதல்	-	-	15000.00			-
வெளிநாட்டுப்பயி ற்சி	1		49510.00			ஊழியர்களிடை யை மேம்பட்ட கனிப்பட்ட வளர்ச்சியை செயல்படுத்த உலகளாவிய நிறுவன அமைப்பில் சிறந்த நிபுணர்களை உருவாக்குதல்

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	முடிக்கப்பட்டது		
1.2	அரச அலுவலர் முற்பணக்கணக்கு	முடிக்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள்(வர்த்தக முற்பணக்கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு	-		
1.6	ஏனைய	-		
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)			
2.1	பொதுநிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (ஊஜபுயுளு) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும்	முடிக்கப்பட்டது		

	பராமரித்தல்			
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்படவில் லை		பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (புபு- பே20) பதிவேட்டை புதுப்பித்தல்	முடிக்கப்பட்டது		
03	நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	முடிக்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	முடிக்கப்பட்டது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	முடிக்கப்பட்டது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	முடிக்கப்பட்டது		
4	வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்	முடிக்கப்பட்டது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	முடிக்கப்பட்டது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	முடிக்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (மேனு) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	முடிக்கப்பட்டது		

5	கணக்காய்வு வினாக்கள்			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	முடிக்கப்பட்டது		
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.பி.134 (2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	முடிக்கப்பட்டது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	முடிக்கப்பட்டது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	முடிக்கப்பட்டது		
7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	முடிக்கப்பட்டது		
8	ஆதன முகாமைத்துவம்			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	முடிக்கப்பட்டது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	முடிக்கப்பட்டது		

8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	முடிக்கப்பட்டது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	முடிக்கப்பட்டது		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	முடிக்கப்பட்டது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறுமாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	-		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	முடிக்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	முடிக்கப்பட வில்லை		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் படி விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	முடிக்கப்பட்டது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	முடிக்கப்பட்டது		
10	வங்கி கணக்குகளின் முகாமை			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத்	முடிக்கப்பட்டது		

	தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்			
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	முடிக்கப்பட்டது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	முடிக்கப்பட்டது		
11	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	முடிக்கப்பட்டது		
11.2	நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	முடிக்கப்பட்டது		
12	அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	முடிக்கப்பட்டது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	முடிக்கப்பட்டது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	முடிக்கப்பட வில்லை		
13	பொது வைப்புக்கணக்கு			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	முடிக்கப்பட்டது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
14	முற்பணக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	முடிக்கப்பட்டது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள்	முடிக்கப்பட்டது		

	தீர்க்கப்படும்.			
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	முடிக்கப்பட்டது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	முடிக்கப்பட்டது		
15	வருமானக்கணக்கு			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	முடிக்கப்பட்டது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	முடிக்கப்பட்டது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	முடிக்கப்பட்டது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	முடிக்கப்பட்டது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	முடிக்கப்பட்டது		
17	பொது மக்களுக்கான தகவல் வழங்கல்			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	முடிக்கப்பட்டது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம்	முடிக்கப்பட்டது		

	அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்			
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	முடிக்கப்பட்டது		
18	பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	முடிக்கப்பட்டது		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	முடிக்கப்பட்டது		
19	மனிதவள திட்டத்தினைத் தயாரித்தல்			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிகை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	முடிக்கப்பட்டது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்	முடிக்கப்பட்டது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	முடிக்கப்பட்டது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன்	முடிக்கப்பட்டது		

	மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்			
20	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்கபட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	முடிக்கப்பட்டது		

முற்றும்